# பீஜித் தீவில் முருகன் வழிபாடு


ஆங்கிலத்தில் மூலக் கட்டுரை :- டாக்கர் எஸ் பொன்னுக் கவுண்டர்

( *Murukan worship in Fiji by Dr. R. Ponnu S. Goundar* )

*தமிழில் மொழி பெயர்ப்பு :- சாந்திப்பிரியா ( nrj_1945@yahoo.com)*


## பீஜித் தீவிற்கு இந்தியர்கள் வருகை






முதன் முதலில் பீஜித் தீவுகளில் இருந்த கரும்புத் பண்ணைகளில் வேலை செய்யவே மேல் நாட்டினர் இந்தியர்களை பீஜித் தீவுகளுக்கு அழைத்து வந்தனர். 1879 ஆம் ஆண்டில் வடக்கு இந்தியப் பகுதியில் இருந்து முதல் குழுவாக சிலர் கப்பல் மூலம் பீஜித் தீவிற்கு அழைத்து வரப்பட்டனர். 1903 ஆம் ஆண்டில் ஆண்டில் மூன்று தென் இந்தியர்களை எல்பா என்ற கப்பலில் அழைத்து வந்தனர். அவர்களுடன்தான் முருகப் பெருமானும் வந்தார். இந்தியாவுக்கும் பீஜி தீவிற்கும் இடையிலான துாரம் 15000 கிலோ மீடர்கள். ஆனால் நம் மூதையர்களோ பீஜித் தீவு எங்கு உள்ளது என்பதைக் கூடத் தெரிந்து கொள்ளாமல் இந்தியாவை விட்டு வந்தனர்.

இந்தோனேஷியா, பாபுவா, புது குயனா மற்றும் ஆஸ்திரேலிய நாடுகளைச் சுற்றிய வண்ணம் பீஜித் தீவிற்கு வந்து சேர அவர்களுக்கு ஆறு மாத காலம் பிடித்தது. அந்த காலத்தில் கடல் காற்றின் துணையை நம்பித்தான் கடல் பயணம் அமைந்து இருந்தது. கப்பலை இயக்கும் இயந்திரங்கள் ஒன்றும் கிடையாது. அப்படியெல்லாம் பயணம் செய்த ஒரு கப்பல் கடலில் மூழ்கி இருந்த பாறையில் மோதி உடைந்தது . ஒருவர் கூடத் தப்ப முடியவில்லை.

## ஆலயத் தோற்றம்

தொழிலாளியாக வந்த, தமிழ் நாட்டின் சேலம் ராஜபூர் தாலுக்காவில் இருந்த சிங்கராண்டபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு இராமசாமிப் பிள்ளையின் ஐந்து வருட கால வேலை ஒப்பந்தம் முடிவுக்கு வந்த பின், 1861 ஆம் ஆண்டில் நந்தி எனும் நதிக் கரையில் முதன் முதலாக தனது இஷ்ட தெய்வத்துக்கு ஒரு ஆலயம் எழுப்ப உள் உணர்வு துாண்ட, அவரால் ஒரு முருகன் ஆலயம் அங்கு கட்டப்பபட்டது.




பீஜித் தீவுகள்

முதலில் அந்த ஆலயம் ஒரு சிறிய கூரை வீட்டில் கட்டப்பபட்டது . ஆதன் பின்னர் திரு இராமசாமிப் பிள்ளை அங்கிருந்த தென் இந்தியர்களிடம் இருந்து நன்கொடைகள் பெற்று ஒரு கருங்கல்லில் கட்டப்பட்ட பெரிய ஆலயமாக அதை மாற்றி அமைக்க அதன் பெயரே பெரிய கோவில் என்று ஆயிற்று. இன்றளவும் அது தென்கோளப் பகுதியில் மிகப் பெரிய கோவிலாகவே அமைந்து உள்ளது.

திரு இராமசாமிப் பிள்ளையின் தனி நபர் ஆலயமாக முதலில் இருந்த அந்த ஆலயத்தினை அவர் இந்தியாவுக்குத் திரும்பிச் சென்றதும், நந்திப் பகுதியில் வசித்த தென் இந்தியர்கள் தென் இந்திய சன்மார்க இயக்கச் சங்கம் என்ற ஒன்றை நிறுவி அதன் பெயரில் அதை விலைக் கொடுத்து வாங்கினர். இன்றும் அந்த ஆலய நிர்வாகம் அந்த சங்கத்தின் மேற் பார்வையில்தான் உள்ளது. தென்காசியில் இருந்து ஒரு பெரிய கருங்கல்லில் செய்யப்பட்ட முருகன் சிலை 1926 ஆம் அண்டில் திரு நாயுடு என்பவரால் வர வழிக்கப்பட்டது. 1931 ஆம் ஆண்டு முருகன், வள்ளி மற்றும் தெய்வயானை முவரும் இருந்த பஞ்ச லோக விக்கிரம் ஒன்று திரு யோகம்பரம் ரெட்டி மற்றும் நந்தியில்



பெரிய கோவில். ஸ்ரீ சிவ சுப்பிரமணிய ஆலயம், நந்தி, பீஜீ

விமானதளத்தின் அருகில் குடி இருந்த சில  பக்தர்களின் உதவியுடனும் வரவழிக்கப்பட்டது. 1970 ஆம் ஆண்டில் டாக்டர். மஹாலிங்கம் என்பவரால் முப்பது கருங்கல்லில் செய்த தெய்வச் சிலைகளும், அர்த்த மண்டப நுழை வாயிலை அலங்கரிக்கும் விதத்தில் இருக்கும்படியாக இரண்டு துவாரபாலக சிலைகளும் அந்த முருகன்  ஆலயத்துக்கு அனுப்பப்பட்டன.

## திருவிழாக்கள்

அங்கு நடைபெறும் திருவிழாக்களில் சில-

- தை பூசம்
- பங்குனி உத்திரம்
- மாத கார்திகை பூஜை
- ஆடிக் கிருத்திகை
- கார்திகை தீபம்
- கந்த சஷ்டி

இவற்றைத் தவிற சிவராத்திரி மற்றும் வினாயகச் சதுர்த்திப் பண்டிகைகளும் விமர்ச்சையாகக் கொண்டாடப்படுகின்றன.

தைபூசம் மற்றும் பங்குனி உத்திரப் பண்டிகைகள் முதலில் இருந்தே கொண்டாடப் படுகின்றன. பிரும்ம உற்சவமான தைபூச உற்சவம் பத்து நாட்கள் மிக விமர்சையாகக் கொண்டாடப் படுகின்றது. பீஜியின் அனைத்து இடங்களில் இருந்தம் இந்தத் திருவிழாவில் கலந்து கொள்ள பெருவாரியான மக்கள் வருகின்றனர். அந்தக் காலங்களில் வாகன வசதிகள் சரிவரக் கிடையாது என்ற போதிலும் நந்தியில் உள்ள அந்த ஆலயத்திற்கு பக்தர்கள் நடந்தே வந்தனர். பீஜித் தீவு சுமார் முன்னூருக்கும் மேற்பட்டத் தீவுகளை ஒன்றடக்கி உள்ளது என்றாலும் அதில் முக்கியமான இரண்டுத் தீவில்தான் பெரும்பாலான இந்தியர்கள் வசிக்கின்றனர். வனுலிவு ( Vanualevu ) என்ற இடத்தில் உள்ள பக்தர்கள் படகில்தான் வரவேண்டி இருந்தது. அப்படி வரும் பக்தர்கள் பத்து நாளும் அங்கேயே தங்கி விழா நிகழ்சிகள் முடிந்த பின்தான் வீடு திரும்புவது



வழக்கம். மற்றும் ஒரு முக்கியப்  பண்டிகை மூன்று முதல் ஐந்து நாட்கள் நடைபெறும் பங்குனி உத்திரப் பண்டிகையாகும். அவரவர்களின் வேண்டுகோட்களை நிறைவேற்றிக் கொள்ள தைபூசம் மற்றும் பங்குனி உத்திரப் பண்டிகைகளை பக்தர்கள் ஆவலோடு எதிர் பார்த்துக் காத்திருக்கின்றனர். பீஜியில் இருந்து அமெரிக்கா, இங்கிலாந்து, கானடா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாடுகளுக்கு இடம் பெயர்ந்து சென்று விட்டவர்கள் கூட காவடி மற்றும் பால் குடங்கள் எடுக்க திருவிழா காலத்தில் அங்கு வருகின்றனர். 1920 அம்

ஆண்டில்தான் திரு அம்பு நாயர் என்பவரால் முதன் முதலாகக் காவடி எடுக்கப் பட்டது. அவர் காவடியை அவர் சுமந்து கொண்டு சுமார் 90 கிலோ மீடர் தொலைவுக்கு நடந்தே வந்தார். இது எந்த அளவு முருகன் மீது பக்தர்கள் நம்பிக்கை வைத்து இருந்தனர் என்பதை தெளிவாக தெரியப் படுத்துகின்றது.

திருவிழாக் காலங்களில் மூன்று வேளையும் அங்கு வரும் பக்தர்களுக்கு கட்டணம் இன்றி ஆலயத்தின் சார்பில் உணவு கொடுக்கப் படுகின்றது. வெளி நாட்டில் உள்ள பக்தர்கள் முருகனுக்கு தங்களுடைய காணிக்கைகளை நண்பர்கள் மூலமும் சொந்தக்காரர்கள் மூலமும் அனுப்புகின்றனர்.

காவடி எடுக்கையில் தங்களின் உடம்புகளில் வேல்களைக் குத்திக் கொண்டும் , சின்ன அளவிலான இரதம் மற்றும் தேர்களை, தங்கள் உடம்பில் குத்திக் கொண்ட கொக்கிகள் மூலம் அவர்கள் இழுப்பது உண்டு. தைபூசம் மற்றும் பங்குனி உத்திரப் பண்டிகைகள் கொண்டாடப் படுகையில் உற்சவ மூர்த்தியையும் வள்ளி, மற்றும் தெய்வயானையை நந்தி நகரம் முழுவதும் ஒரு தேரில் ஏற்றி வைத்தபடி பவனி வருவர். பக்தர்கள் அந்த உற்சவ மூர்த்திகள் தங்கள் வீடுகளின் முன் வந்து நின்று காணிக்கைகளைப் பெறுவதை ஆவலோடு எதிர் பார்த்து நிற்பதுண்டு. ஏதாவது தட்டமுடியாதக் காரணத்தினால் ஊர்வலம் நடை பெறாது போனால் பக்தர்கள் பெருமளவு ஏமாற்றம் அடைகின்றனர்.

அநேகமாக 1940 ஆம் ஆண்டு முதல்தான் திருவண்ணாமலையைச் சேர்ந்த திரு ஆறுமுக உடையார் என்பவரால்தான் கார்திகைத் தீப விழா நடைபெறத் துவங்கியிருக்க வேண்டும். அவர் துவக்கி வைத்த அந்த விழா அவருடைய வம்சாவளியினரால் இன்றும் அவர்களுடைய குல வழிபாட்டு விழாவாகவே நடை பெறுகின்றது. 1956 ஆம் ஆண்டு மதுரையில் இருந்து வந்த திரு நாயுடு என்பவரால் கந்த சஷ்டி விழா துவக்கப் பட்டது. அதுவரை அங்கு ஆலயத்தில் உள்ள கந்தனுக்கு எந்த விதமான வாகனமோ, வேலோ இருந்தது இல்லை. வாகன வசதிகள் நிறைந்து விட்டதினால் இப்பொழுதெல்லாம் மிக அதிக எண்ணிக்கையிலான பக்தர்கள் அங்கு விழாக் காலங்களில் வரத் துவங்கி உள்ளனர்.

## பீஜித் தீவில் மற்ற இடங்களில் உள்ள முருகன் ஆலயங்கள்

நந்தியில்தான் மிகப் பழமையானதும் மிகப் பெரியதுமான முருகன் ஆலயம் உள்ளது. அதைத் தவிற பீஜித் தீவில் தாதி தாகி, கோரோனுபு மற்றும் நவுவா ( Tagi Tagi, Koronubu and Navua ) என்ற பல இடங்களிலும் முருகனுக்கு தனி நபர்களால் கட்டப்பட்டுள்ள கட்டி உள்ள ஆலயங்கள்

உள்ளன. அங்கெல்லாம் செல்லும் பொழுது நம்மை அறியாமலேயே தெய்வீக அதிர்வலைகள் நம்மை சூழ்வதை உணர முடியும்

## தமிழ் குழந்தைகளின் பெயர்கள்

முந்தைய காலத்தில் பீஜியில் பிறந்த குழந்தைகளுக்கு, முக்கியமாக ஆண் குழந்தைகளுக்கு முருகன் என்றும், சுப்பிரமணியன், ஆறுமுகன், ஷண்முகன், சின்னசாமி, வேலாயுதன், துரைசாமி, குமாரசாமி, குப்புசாமி, பொன்னுசாமி மற்றும் கந்தசாமி என்ற பெயர்களை வைப்பது உண்டு. பெண் குழந்தைகளுக்கு வள்ளியம்மா என்றும் தெய்வயானை என்றும் பெயர் வைப்பதுண்டு. இப்படி பெயர் வைப்பது முருகனிடம் அவர்கள் கொண்டிருந்த பக்தியினால்தான். ஆனால் இப்பொழுதோ இப்படிப்பட்ட பெயர்களை வைப்பது மிக அபூர்வமாகி விட்டது. ஏன் எனில் தமிழர்களுக்கு இந்தி மொழி மீதும் இந்தித் மொழித் திரைப் படங்களின் மீதும் ஏற்பட்டு உள்ள மோகம் தமிழ் மொழியை மறக்க வைத்து விட்டது . தற்பொழுது பீஜித் தீவுகளில் உள்ள தமிழர்கள் கூட இந்தி மொழி பேசுவதையே பெரிதும் விரும்புகின்றனர். பீஜியில் முருகனைப் பற்றி ஆங்கிலத்தில் சில புத்தகங்கள் வெளியாகி உள்ளன. தமிழ் நாட்டில் இருந்தும் சில தமிழ் புத்தகங்கள் வருகின்றன.

## பின் குறிப்பு

தமிழ் நாட்டில் இருந்து சென்று பீஜியின் இரண்டாம் வம்சாவளி தமிழனாக உள்ள எனக்கு என்னுடைய பெற்றோர்கள்தான் முருகன் மீதான பக்தியை ஊட்டினர் என்றாலும் மேன்மை மிகு சாது குப்புஸ்வாமி அவர்கள்தான் அந்த பக்தி எனக்குள் பெருக அருள் புரிந்தார். அவர்தான் தென் இந்திய சங்கம் ( Ten Intiya Camman kaIkya Cankam ) ஒன்றை பீஜியில் நிறுவி, அதன் மூலம் நந்தியில் உள்ள ஆலயத்தையும் சேர்த்து அங்குள்ள அனைத்து ஆலயங்களையும் மேற் பார்வை இடுகின்றனர். அது மட்டும் அல்ல, சாது குப்புஸ்வாமி அவர்கள் இராமகிருஷ்ண மடத்தை சார்ந்த ஸ்வாமி ருத்திரானந்தஜி ஸ்வாமியின் துணையைப் பெற்று, கரும்புப் பண்ணைகளில் வேலை செய்து வந்த தொழிலாளிகளின் மேம்பாட்டிற்கும் ஆவன செய்தார். அவர்தான் விவேகாநந்தா கல்வி நிறுவனத்தையும் அங்கு துவக்கினார். அந்தப் பள்ளியில்தான் நான் படித்தேன் எனறு எண்ணும் பொழுது நான் பெருமை படுகிறேன். அவற்றுக்கெல்லாம் காரணம் முருகப் பெருமானின் அருள்தான். பீஜியின் அனைத்து முன்னேற்றத்திற்கும் காரணமாக இருந்த என் மூதோர்களுக்கும் மனதாற என் வணக்கங்களைத் தெரிவிக்கின்றேன்